**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 43/2020**

**Deposition of Witness for : PW 6**

**Name** : திரு. தங்கராஜ்

**Father Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08-09-2023.**

**(Accused present)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது பெரியமோட்டூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நியாபகம் இல்லை. சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது. இறந்தவர் என் அண்ணன் ராஜா. இறந்து போன ராஜாவின் நிலத்திற்கு பக்கத்தில் என் நிலம் உள்ளது. சத்தம் கேட்டது நான் சென்று பார்த்த போது ராஜா என்பவர் இறந்து கிடந்தார். அவரது உடல் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் உடல் கூராய்வுக்கு அனுப்பப்பட்டது நான் சென்று பார்த்தேன். யார் கொலை செய்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரணையில் என் சித்தப்பா முறையான ராஜி என்பவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த நாராயணன் மகன் ஜெயபால் என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வந்தது. கடந்த 24.4.2018 ந் தேதி காலை 5.30 மணிக்கு நெடுங்காவாடி தனஞ்செழியன் என்பவரது நிலத்தின் அருகில் என் சித்தப்பா ராஜியை ஜெயபால் கொடுவாள் கத்தியால் குத்தி விட்டதாகவும், அதனால் அவர் இறந்து விட்டதாகவும் கேள்வி பட்டு போய் பார்த்தேன். பின்னர் நான் விசாரிக்க நெடுங்காவாடி கிராமத்தைச் சேர்ந்த நாராயணன் மகன் ஜெயபால் என்பவர் என் சித்தப்பா ராஜியை முன் விரோதம் காரணமாக கொலை செய்து விட்டதாக அறிந்து கொண்டேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

ஒம்/- தங்கராஜ்

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.